# அறேபியச் சமூகக் கட்டமைப்பில் இறைத்தூதர் ஏற்படுத்திய மாற்றங்கள்: ஒரு சமூகவியல் நோக்கு

# The Changes Brought about by Prophet Mohamed (Sal) in the Arabian Social Structure: A Sociological Perspective

M.F. Famees

சமூகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
fawsfamees1@gmail.com

**ஆய்வின் சுருக்கம்**

உலக அளவில் தனிமனிதர்களின் வழிநடாத்தலினால் சமூகப் புரட்சி, சமூக மாற்றத்தினை நோக்கிய நகர்வு வரலாறாகும். இத்தகைய பின்புலத்தில் உலகில் இன்று அதிக மக்களின் விருப்பத்திற்குரியவராகவும், சகல துறைகளிலும் சிறந்து விளங்கியவரும், பல்துறைச்சார்ந்தவர்களின் நற்பெயரினைப் பெற்றவராக நபி முஹம்மத் (ஸல்) காணப்படுகின்றார். 23 வருடங்கள் தூதுத்துவப்பணியின் மூலமாக உலகின் ஏனைய செல்வாக்குமிக்கவர்கள் ஏற்படுத்திய சாதனைகளினை விட சமூக கட்டமைப்பில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தினார்கள். இதனால் அமெரிக்க வரலாற்றாசிரியர் மைக்கல் எச்.ஹாட்ர் வேறு எந்த தலைவருடனும் ஒப்பிடமுடியாத மனித வரலாற்றில் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தியமையில் செல்வாக்குமிக்க 100 பேரில் முஹம்மது நபியை முதலாமவராக்கினார். ஆய்வின் நோக்கமாகக் இறைத்தூதர் அரேபிய சமூகக் கட்டமைப்பில் சமூக ஏற்படுத்திய சமூகமாற்றத்தினை ஆராய்வதாகும். ஆய்வானது பண்பு சார்ந்த ஆய்வு வடிவத்தினைக் கொண்டிருப்பதுடன், கருப்பொருள் பகுப்பாய்வு, ஒப்பியல் சமூகவரலாற்றியல் போன்ற அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவுசேகரிப்புக்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளாக தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வரலாற்று நூல்கள் பயன்படுத்தப்பட்டதுடன், இரண்டாம் நிலைத்தரவுகளாக முதலாம் நிலைத்தரவுகளுக்கு தரவுகளுக்கு வலுவூட்டும் வகையிலான நூல்கள், சஞ்சிகைகள், காணொளிகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து தகவல்கள் திரப்பட்டப்பட்டன. பெறப்பட்ட தகவல்களின்படி சமூகநிறுவனங்களான திருமணம், குடும்பம், பொருளாதாரம், அரசியல், சமயம் போன்றவற்றில் இறைத்தூதுரியத்துக்கு முன்னரான நிலையினை இறைத்தூதரிய வருகைக்கு பின்னரான நிலையுடன் பகுப்பாய்வு செய்கின்றது. அரேபியாவின் சமூகக் கட்டமைப்பின் பிரதான சமூக நிறுவனமான குடும்பமானது கோத்திர முறைமை, ஆண்டான்- அடிமை முறைமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூகச் சமத்துமீன்மை, சமூக நீதியின்மை, சட்டத்தின் ஆட்சியின்மை, நலிவுற்றவர்களின் மீது கவனச்செலுத்தப்படாமை, பெண்களின் மீதான அநீதி மற்றும் பாரபட்சம் போன்ற பண்புகளைக் கொண்டிருந்தது. இதர சமூக நிறுவனங்களான திருமணம், பொருளாதாரம், அரசியல், சமயம் போன்றன சீர்குழைந்தாகவும், கீழ்நிலையுமாக இருந்தது. இவர் இவ்வாறு சிதையுண்டு போயிருந்த சமூக நிறுவனங்களில் சீர்திருத்தமையும், நேர்மையமான சமூகமாற்றத்தினை ஏற்படுத்தினார்கள். சமூக கட்டமைப்புக்குள் நற்பண்புக்கு ஊக்குவித்ததுடன், தீயபழக்க வழக்கங்களினை இல்லாமலாக்கியமை, திருமணம், குடும்ப நிறுவனங்களினை இஸ்லாமிய செயல்வடிவம், சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி,

சட்டவாட்சி மற்றும் பல்சமயத்தினைக் கருத்திற்கொண்ட யாப்புருவாக்கம், நலிவுற்றவர்களுக்கான சமூகநலன்புரி, சிறுபான்மை காப்பீடு போன்ற மேலும் பல சமூகமாற்றங்களைக் ஏற்படுத்தினார்கள். தனது மிகக்குறுகிய காலத்திற்குள் தனிமனிதனால் ஏற்படுத்த முடியாத வகையில் சமூகக்கட்டமைப்பு மற்றும் சமூகநிறுவனங்களில் மாற்றங்களினை ஏற்படுத்தினார்கள். சமூகமாற்றம் சார் சமூகவியல் நோக்குநிலை போன்று இறைத்தூதருடன் தொடர்புடைய இது போன்ற வெவ்வேறுபட்ட நோக்குநிலைகளில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென எதிர்கால ஆய்வாளர்களுக்குப் பரிந்துரைக்கின்றது.

**திறவுச் சொற்கள் : அரேபியச் சமூகம், நிறுவன கட்டமைப்பு, இறைத்தூதர், சமூக மாற்றங்கள்**

## ஆய்வு அறிமுகம்

உலக வரலாற்றில் மிகக் குறுகிய காலத்திற்குள் சமூகக் கட்டமைப்பு, சமூக நிறுவனங்கள் மற்றும் சமூகத்தின் பிரதான தொழிற்பாட்டுக் கூறுகளான குடும்பம், திருமணம், அரசியல், சமயம், பொருளாதாரம் மற்றும் சமூக நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களில் மாற்றத்தினை ஏற்படுத்தியக் காலப்பகுதியாக 06ஆம் நூற்றாண்டு காணப்படுகின்றது. அரேபிய தீபகற்பத்திலே கி.பி 571இல் ஹிஜாஸ் மாகாணத்தின் மக்கா நகரில் ஆமினா, அப்துல்லாஹ் ஆகியோருக்கு மகனாகப் பிறந்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறைவனால் முழு அகிலத்துக்கும் அருட்கொடையாக அனுப்பப்பட்டார்கள். இவரது அழைப்பணி வெறும் இரண்டறைத் தசாப்தத்திற்கும் குறைவான காலப்பகுதியாக இருந்ததுடன், சமூகக் கட்டமைப்பிலும், சமூக நிறுவனங்கள் மற்றும் அதன் கூறுகளிலும் வியத்தகு மாற்றத்தினை ஏற்படுத்தியது.

இறைத்தூதரியமானது எந்தவொரு தனிமனிதனும் உலகளவில் இதுவரைக்கும் ஏற்படுத்தாத சமூகப் புரட்சியை ஏற்படுத்தியதுடன், அரேபியாவில் இருந்து ஆபிரிக்கா என உலகின் நாற்திசைகளுக்கும் பரவியது. நேர்மையான சமாதான அணுகுமுறையில் மிக அமைதியாக தயவுடனும், மென்மையான, நற்குணங்களினை அணிகலங்களாகக் கொண்டு சமயப் பிரசாரம் இருந்தது. மேலும் தனது கருத்துக்கு உடன்படுமாறு நிர்ப்பந்திக்காத ஒரு அணுகுமுறையாக இவரது அணுகுமுறை இருந்தது. மட்டுமன்றி, மக்களினைப் பாதுகாப்பதற்கும், முன்னுரிமைப்படுத்துவதுக்குமான விடயங்களிலும், மக்களின் நலன்களின் மீது அக்கறைக் கொண்டதாகவும், தன்னை சங்கைப்படுத்துமாறு அழைக்காத ஓர் அழைப்புப் பணியாகவும் இது இருந்தது. இவ்வாறான இயல்புகளைக் கொண்ட இறைத்தூதுப்பணி உலகிற்கு மிகக் குறுகிய காலத்திற்குள் ஏற்பத்திய மாற்றங்களை ஆராய்தல் மிகவும் இன்றியமையததாகும்.

உலகளாவிய ரீதியில் கிரேக்க, உரோம மற்றும் ஏனைய நாகரிகங்களுக்குப் பின்னரே முறையே 06 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய நாகரீகம் தோற்றம் பெற்றதுடன், இன்று வரைக்கும் நிலைத்து நிற்கும் நாகரீகமாகவும் உள்ளது. எனவே தான் மைக்கல். எச். ஹாட்ர். உலகின் செல்வாக்குமிக்க முதலாயிரம் பேரில் 100 பேரினைத் தெரிவாக்கி அதிலும், நபிகளாரினை முதலாம் நபராக்கினார்கள். இவர் குறிப்பிடுமிடத்து ‘‘வேறு எந்த தலைவருடனும் ஒப்பிட முடியாத மனித வரலாற்றில் ஆழமான தாக்கத்தினை இவர்

ஏற்படுத்தினார்கள்'' என்கின்றார். அரேபிய வரலாற்றில் ம.ஃ.ரிபா அணைக்கட்டு கி.பி. 300இல் அழிவுக்குட்பட்டது. கி.பி 571இல் இறைத்தூதர் பிறந்ததுடன், கி.பி 610இல் இஸ்லாமிய தெளிவுப்படுத்தல் ஆரம்பமானது(முஹம்மது சுக்ரி ஹனபி: 2013). ஆகவே, இஸ்லாமிய அழைப்புப்பணி ஆரம்பகால 13 வருடங்கள் மக்காவில் இடம்பெற்றதுடன், ஆரம்பச் சமூகக் கட்டமைப்பு, தனிமனித உருவாக்கத்தின் மீது கவனம் செலுத்தியதுடன், பின்னரான மதீனாவின் 10 வருடங்கள் இஸ்லாமிய சமூக உருவாக்கத்துடன், தொடர்புடையதாக இருந்தது. இத்தகைய ஆய்வுப் பின்புலத்தில் இறைத்தூதரும் அரபியக் சமூகக் கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்களை அடிப்படையில் ஆய்வு அறிமுகமாகவுள்ளது. சமூக நிறுவனங்களான குடும்பம், திருமணம், பால்நிலை, அரசியல், சமயம், பொருளாதாரம் ஆகியவற்றின் நிலையையும், இறைத்தூதர் ஏற்படுத்திய சமூக மாற்றங்களையும் சமூகவியல் நோக்கு நிலையில் ஆய்வானது முன்னெடுக்கப்படுகின்றது.

**கோட்பாட்டு ரீதியான பிரயோகம்**

சமூக மாற்றம் தொடர்பாக பல்வேறுபட்ட அறிஞர்களினால் பல்வேறுபட்ட கோட்பாடுகள் காலத்திற்கு காலம் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக சமூக மாற்றம் என்பது சமூகவியலில் முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது. சமூக மாற்றக் காரணிகளாக பௌதீக, உயிரியல், தொழில்நுட்பம், பண்பாட்டுக் காரணிகள் சேர்ந்து மாற்றத்தினைத் தூண்டுகின்றது. சமூகவியலாளரான ''கிங்ஸ்லி டேவிட்'' சமூக மாற்றம் என்பது சமூகத்தின் கட்டமைப்பிலும், தொழிற்பாடுகளிலும் தோன்றும் மாறுதல்கள் என்கின்றார். இது தொடர்பாக அறிஞர் மஜூம்தார் குறிப்பிடுமிடத்து புதிய நடை, உடை, பாவனை(fashion) ஆகும். சமூக நடவடிக்கைகளில் உள்ள பழைமையை உருமாற்றுகின்றது என்றார். மேலும் சமுதாய வாழ்வில் மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றை காட்டிலும், வேறு எந்த நிகழ்வுகளும் சமுதாயத்திற்கு பெரும் சவாலாக இருக்க முடியாது(பக்தவக்சல பாரதி,1990). ஆய்வானது அரேபிய சமூகக் கட்டமைப்பில் சமூக மாற்றக்காரணிகளுக்கான சூழ்நிலை, பரிணாமம், நடுநிலை, உட்பட சமூகமாற்றத்துடன் தொடர்புடைய கோட்பாடுகளினைப் பிரயோகிக்கின்றது.

**இலக்கிய மீளாய்வு**

எந்தவொரு ஆய்வினை மேற்கொண்டாலும் ஆய்வுடன் தொடர்புடைய முன்பு வெளிவந்த ஆய்வுகள் பற்றி ஆராய்வது மிக அவசியமானது. ஆய்வினை சிறப்பாக நடாத்திச் செல்லவும் எண்ணக்கரு சட்டகமொன்றை (concepural framework) உருவாக்க மற்றும் ஆய்வுக்கான பல தகவல்களைப் பெறவும் இலக்கிய மீளாய்வு உதவுகின்றது.

அமீன்,எம்.ஐ.எம்,(2011), 'அரேபியர் வாழ்வியல்' என்ற ஆக்கமானது இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபியரின் சமூக, பொருளாதாரம், குடும்பம், அரசியல், நிர்வாகம், சமயம், கோத்திரவியல் மற்றும் நம்பிக்கை முறைகளைப் பற்றி குறிப்பிடுகின்றது. இவ்வாய்வானது மேற்குறிப்பிட்ட சமூக நிறுவனங்கள் மற்றும் சமூக கூறுகளிடையே ஏற்பட்ட சமூக மாற்றத்தினை ஆராய்வதன் அடிப்படையிலும் இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபியரின்

நிலைமையை இஸ்லாத்திற்கு பின்னரான நிலைமைகளுடன், ஆராய்கின்றதன் அடிப்படையில் இவ்வாய்வுக்கான பகுப்பாய்விற்குத் துணை நிற்கின்றது.

Qadri Suwaibah.M, Qadri , Lubna Ahsan, (2016), ஆகியோரியால் முன்னெடுக்கப்பட்ட **The Administration of Prophet Muhammad (PBUH) and Its Impact on the Contemporary State** குறிப்பிட்ட ஆய்வானது சமூகத்தின் முக்கிய கருவியான இறைதூதரின் நிர்வாகக் கட்டமைப்பு முறையைப் பற்றி குறிப்பிடுகின்றது. அரேபிய நிர்வாக மற்றும் தலைமைத்துவ முறையினை இறைத்தூதரியத்துடன் வேறுபடுகின்ற விதத்தினைக் குறிப்பிடுகின்றது.

இஸ்மியா போகம்,எம்.எஸ்,(2013) உலக நாகரிகங்கள் நதிக்கரையை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்றதுடன், இஸ்லாமிய நாகரிகமானது பாலைவனத்தை மையமாகக்கொண்டு மதீனாவிலேயே தோற்றம் பெற்றது. இறைத்தூதரினைத் தலைவராக கொண்ட இந்நாகரிகம் உலகில் ஏற்படுத்திய சமூக கட்டமைப்பு, கலாச்சார, வாழ்வியல் கூறுகளிடையே ஏற்படுத்திய மாற்றங்களை ஏனைய நாகரீகங்களுடன் ஒப்பிடு செய்கின்றதன் அடிப்படையில் ஆய்வினை முன்னெடுப்பதற்கு திசை வழிகாட்டுகின்றது.

அமீன்,எம்.ஐ.எம்,(2019), கட்டுரையானது சமூகமாற்றம், சமூக நிறுவனங்களில் மிக முக்கியமான ஒன்றான அரசியலின் கட்டமைப்பில் இறைத்தூதர் அரேபியாவில் ஏற்படுத்திய மாற்றங்களினைக் குறிப்படுகின்றது. நல்லாட்சிக்குரிய உயிர்வாழ்தல், கண்ணியம், தனிமனித சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி போன்ற இயல்புகளினை குறிப்பிடுகின்றதன் அடிப்படையிலேயே இறைத்தூதர் ஏற்படுத்திய அரசியல் சார்ந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கு இவ்வாய்வு துணை நிற்கிறது.

Andony Giddens,(2006),Sociology 5th edition எனும் நூலில் சமூக மாற்றம் தொடர்புடைய எண்ணக்கருக்கள் மற்றும் வரைவிலக்கணங்களினைக் குறிப்பிடுன்றது. மேலும் சமூக கட்டமைப்பில் செல்வாக்குச் செலுத்தும் சமூக நிறுவனங்கள் பற்றியும், அது பற்றிய சமூகவியல் நோக்கு நிலையிலும், ஆய்வானது பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் ஆய்வுக்கு துணைநிற்கின்றது.

ஜாகிர்,நா,(2014),இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமைகள் காலம் கடந்தவையா? நவீனமயமனவையா? என்ற ஆக்கமானது அரேபிய சமூகத்தின் கட்டமைப்பில் பெண்களுக்குரிய சமூக, அந்தஸ்து, சமூகக் கட்டமைப்பில் இஸ்லாம் வழங்கிய சமூக, பொருளாதார, கல்வி, சட்டம் மற்றும் அரசியல் உரிமைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறது. இறைத்தூதரிய சமூகக் கட்டமைப்பில் முக்கிய சமூகக் கூறுகளான பெண் மற்றும் பால்நிலை மூலமாக ஏற்படுத்திய மாற்றத்தினை ஆராய்கின்றது.

ஸ.்.பிய்யுர் ரஹ்மான், ம,(2014), இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபியச் சமூகநிலை, அழைப்புப்பணி மற்றும் இறைத்தூதரிய அழைப்புப்பணி சமூகக் கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்களை வரலாற்று நோக்குநிலையில் குர்ஆன், ஹதீஸினை ஆதாரமாகக் கொண்டு ஆராய்கின்றது. மேலும் அரேபியச் சமூக நிறுவனங்களின் நிலையினை ஒப்பியல் நோக்குநிலையில் ஆராய்வதற்கும் திசைவழிகாட்டுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

**ஆய்வின் பிரதான நோக்கம்**

ஆய்வின் நோக்கமாகக் இறைத்தூதர் அரேபியச் சமூகக் கட்டமைப்பில் ஏற்படுத்திய சமூகமாற்றத்தினை ஆராய்வதாகும்.

**ஆய்வின் உபநோக்கங்கள்**

இறைத்தூதரிய அழைப்பணிக்கு முன்னரான அரேபியாவின் சமூக நிறுவனங்களின் நிலையைக் கண்டறிதல்.

இறைத்தூதரிய அழைப்புப்பணியின் பின்னரான அரேபியாவின் சமூக நிறுவனங்களின் ஏற்பட்ட சமூக மாற்றத்தினை ஆராய்தல்.

இறைத்தூதரிய சமூக மாற்றத்தினை ஒப்பீட்டு நோக்குவதுடன், இது சார்ந்து வெவ்வேறுபட்ட சமூகவியல் நோக்குநிலைகளினை முன்மொழிதல்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வானது பண்பு சார்ந்த ஆய்வு வடிவத்தினைக் கொண்டிருப்பதுடன், கருப்பொருள் பகுப்பாய்வு, ஒப்பியல் சமூகவரலாற்றியல் போன்ற அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தரவு சேகரிப்பு நுட்பங்கள்**

இந்த ஆய்வு தொடர்பான தரவுப் பகுப்பாய்வு தேவையான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. முதன்மை தரவுகளாக தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வரலாற்று நூல்கள் பயன்படுத்தப்பட்டதுடன், இரண்டாம் நிலைத்தரவுகளாக இந்த தரவுகளுக்கு வலுவூட்டும் வகையிலான நூல்கள், சஞ்சிகைகள், காணொளிகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து தகவல்கள் திரப்பட்டப்பட்டன.

**தரவுகளும் பகுப்பாய்வு முறைகளும்**

ஆய்வானது பண்பு ரீதியான தரவுகளை உள்ளடக்கியதாக உள்ளது. அரேபிய சமூகக் கட்டமைப்பிலும், சமூக நிறுவனமான குடும்பத்திலும், அடுக்கமைவிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் (கோத்திரம், பொருளாதார முறைமை, ஆண்டான் - அடிமைச் சமூக அமைப்பு, பதவி) ஆகியவற்றின் நிலையும் இறைத்தூதர் ஏற்படுத்திய சமூக மாற்றங்களினையும் மேலும் அரேபிய சமூகக் கட்டமைப்பில் சமூக நிறுவனங்களான குடும்பம், திருமணம், அரசியல், சமயம், பொருளாதாரம் ஆகியவற்றின் நிலையும், இறைத்தூதர் ஏற்படுத்திய சமூக மாற்றங்களையும் ஆய்வானது கருப்பொருள் மற்றும் வரலாற்று ஒப்பியல் அணுகுமுறையிலும் பகுப்பாய்வு செய்கின்றது.

**ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடலும்**

**இறைத்தூதர் முஹம்மது(ஸல்)**

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கி.பி. 571இல் இன்றைய சவுதி அரேபியாவின் மக்கா நகரிலேயே பிறந்தார்கள். அப்துல்லாஹ் மற்றும் ஆமினா ஆகியோருக்கு மகனானப் பிறந்ததுடன், சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்தார். இளைமைப்பருவத்திலேயே சமூகத்தின் நம்பிக்கைக்குரியவர்கள், உண்மையாளர் போன்ற சிறப்புப்பட்டங்களையும், சமூகத்தின் நற்பெருபெற்றவராகவும் காணப்பட்டார். நாற்பதாவது வயதில் நபித்துவம் கிடைத்ததுடன், குறுகிய காலத்திலேயே (23 வருட) காலத்துக்குள் முழு அரேபியாவின் வாழ்வினையும் சமூக மாற்றத்தினை ஏற்படுத்தி வியத்தகு நிலைக்குக் கொண்டு சென்றார்கள். பல நூறு வருடங்களாக போர் இடம்பெற்ற மண்ணில் இரண்டு தசாப்தத்திற்குள் அரேபியாவை ஒற்றுமைப்படுத்தினார். மேலும் லௌகீகம், ஆன்மீகம் ஆகிய இரண்டையும் இணைந்ததாக இவரது அழைப்புபணி இருந்தது. அரேபியாவின் சமூகக் கட்டமைப்பு மற்றும் சமூக நிறுவனங்களின் சீர்திருத்தம், நிலைமாற்றத்தினை ஏற்படுத்தியதுடன், சமூக தலைவர், ஆன்மீக வழிகாட்டி, கொள்கை வகுப்பாளர், பால்நிலை சமத்துவம் பேணுபவர், முரண்பாட்டுத் தீர்வாளர், சமூகப்பணியாளர், சமூக நலன்புரியாளர் எனப் பல்துறைச் சார்ந்தவராக திகழ்ந்துள்ளமை ஆச்சரியப்படத்தக்கது. மனித வரலாற்றில் அனைத்தும் ஒன்றுசேரப் பெற்ற ஒரே மனிதரான இவரே இருக்கின்றார் என்ற வகையில் ஆய்வானது சமூகவியல் நோக்கு நிலையில் சமூக மாற்ற மூகவராகச் செயற்பட்டமையை ஆராய விளைகின்றது.

**அரேபியச் சமூகம்**

தென்கிழக்காசியாவில் அமைந்துள்ள அரேபியா உலகின் மிகப்பெரிய தீபகற்பம் ஆகும். மேற்கே செங்கடலையும், கிழக்கே பாரசீககுடாவையும், தெற்கே இந்து சமுத்திரத்தையும், வடக்கே சிரியா பாலைநிலத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது. மேலும் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்டுள்ள அரேபியா ஹிஜாஸ், யெமன், நஜ்த், அம்மான் ஆகிய 05 பகுதிகளைக் கொண்டிருந்தது. அன்றைய அரேபியா சமூகக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க ஒன்றாக கொலை, கொள்ளை, வழிப்பறி கொள்ளை, மது, மாது, சூது, கோத்திரச்சண்டை, அனாதைகளின் உடமைகளைப் பறித்துக் கொள்ளுதல், சிலை வணக்கம், குலப்பெருமை, பழிக்குப் பழி வாங்குதல், மூட நம்பிக்கைகள், பெண்களை இன்பப் பொருளாக கருதுதல், பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்தல், அடிமைகளை சித்திரவதைக்குப்படுத்தல் போன்ற செயற்பாடுகளால் மூழ்கியிருந்தது. ஆகவே இச்சமூக நிலையானது இறைத்தூதரியமூடாக நேர்மய சமூக மாற்றத்திற்குட்பட்டது.

**சமூக நிறுவனங்கள்**

சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புக்களே சமூக நிறுவனங்களாகும். சமூக நிறுவனங்களாவை சமூகக் கட்டமைப்பு (social structure) பொறிமுறை (machannism) ஆகியவற்றினைப் பிரயோகின்றன. மானுடத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்கான செயல்களை இவை ஒழுங்குபடுத்துகின்றன எச்.ஈ.பர்னஸ் குறிப்பிடுகின்றார். சமூக நிறுவனம் தொடர்பாக A.C , Ellwood குறிப்பிடுமிடத்து சமூகத்தில் காணப்படும் ஒவ்வொரு நபர் சேர்ந்து குழுக்கள் தம் தேவைகளை நிறைவேற்ற

ஒரு சமூக அமைப்பு குழுக்களும் அதன் தேவைகளை நிறைவேற்ற ஒரு சமூக அமைப்பு அடிப்படையில் இவை உருவாகின்றன. குழுக்களில் ஏற்படுத்தப்பட்ட ஆணையினை அனுமதிக்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு, நிலைநிறுத்தப்பட்டு ஒன்று சேர்ந்து வாழ்தல் தன்மையே சமூக நிறுவனங்கள் என்கின்றார்.

சமூக நிறுவனங்கள் குழுக்களினால் வழிப்படுத்தப்பட்ட செயன்முறையாகவும்(மைக் ஜவர்), ஒவ்வொன்றும் வெவ்வேறு தன்மைகள் விழுமியங்கள்(Values), குறியீடுகள் (Symbols), மனப்பான்மை(Attiute)கொண்டுதாக இருப்பதுடன், சமூகத் தேவைகளை நிறைவேற்றுதல் ஏனையவற்றுடன் இணைந்ததாகவும், எழுத்து அல்லது பேச்சு மூலம் ஒழுங்கினைக் கொண்டதாகவும் காணப்படும். சமூக நிறுவனங்களை பொறுத்தவரையில் முதலாம் நிலை, இரண்டாம் நிலை சமூக நிறுவனங்கள் என வகைப்பாட்டு ரீதியாக நோக்கப்படுகிறது. குடும்பம், நண்பர், சமயம், திருமணம், போன்றன முதலாம் நிலை சமூக நிறுவனங்களாகும். சமூக நிறுவனங்களில் இரண்டாம் நிலை சமூக நிறுவனங்கள் சம்பிரதாய உறவுமுறைகளில் கொண்டதாகவும், நெருக்கமற்ற தன்மை கொண்டதாகவும், சமூகம் வளர்ச்சி அடைந்து பின்னரான ஒன்றாக காணப்படுகின்றன. கல்வி, சட்டம், அரசியல், என்பன அடங்கும். ஆகவே சமூகத்தின் கட்டமைப்பின் பிரதான சமூக நிறுவனங்களான குடும்பம், திருமணம், சமயம், பொருளாதாரம், அரசியல் என்பன காணப்படுகின்றதனடிப்படையிலேயே ஆய்வானது இச்சமூக நிறுவனங்கள் அரேபிய சூழமைவில் காணப்பட்ட கட்டமைப்பு, நிலையினையும் இறைத்தூதரின் அழைப்பணியின் பின்னரான நிலையையும் ஆராய்கிறது.

## அரேபியாவில் சமூகத்தில் சமூக நிறுவனங்களின் நிலையும் இஸ்லாம் ஏற்படுத்திய சமூக மாற்றங்களும்

### சமூக நிறுவனமான திருமணமும், அதன் நிலையும் இறைத்தூதர் ஏற்படுத்திய மாற்றங்களும்

சமூகத்தின் மிகச் சிறிய அலகாக குடும்பம் உள்ளதுடன், இதனூடாக ஆண், பெண் ஆகியோரினைத் திருமணம் மூலம் இணைக்கின்றது. திருமணமானது பாலியல் வாழ்க்கைக்கான ஒழுங்கு முறையும், பொருளாதாரக் கூட்டுணர்வினையும், ஒத்துழைப்பினையும், வாழ்க்கைத் துணைக்கான உணர்வு மற்றும் அதிகார ரீதியாக பங்கு கொள்ளல், சமூக உறுதிப்பாட்டிற்கான இலக்கினை அடைவதற்கான சமூக ஆரம்ப நிறுவனமாகத் திருமணம் உள்ளதென அறிஞர் மர்தூக் குறிப்பிடுகின்றார். இஸ்லாத்திற்கு முன்னரான அரேபியச் சமூகமானது சமூகக் கட்டுப்பாடற்ற, ஆண்கள் எண்ணிக்கையற்ற முறையான பாலியல் தேவைப் பூர்த்தி செய்தமை, விவாகரத்து, விபச்சாரம் போன்ற பல காரணிகள் சமூகச் சீர்குழைவிற்கு அடிதளமாகவும் அமைந்தது. இஸ்லாத்திற்கு முன்னர் அரேபியாவில் முறையான திருமணம் (நிகாஹ், ஸஹிஹ்), கால நிர்ணயத் திருமணம் (முத்ஆ), குழந்தையைப் பெறுவதற்காகத் திடமான ஒருவரிடம் அனுப்புதல் (நிகாஹில் இஸ்திப்லாஹ்), மாற்றுத் திருமணம் (நிஹாஹ் பத்ல்), பலதார மணம் மனைவியரை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ மாற்றும் திருமணம், ஆண்கள் பத்துப் பேர் ஒரு பெண்ணுடன் உறவு கொண்டு அதன் மூலம் குழந்தை பிறந்ததும் தாய் கணவரைத் தெரிவு செய்யும் திருமணம் (மாதுனய் அஸ்ர்) உட்பட மேலும் பல திருமண முறைகள் அரேபியச்

சமூகக் கட்டமைப்பில் காணப்பட்டது. ஆகவே, எண்ணிக்கையற்ற பலதாரமணத்தினை நான்கு என இஸ்லாம் மட்டுப்படுத்தியதுடன், ஸஹிஹான திருமண முறையும் ஏற்படுத்தியதுடன், திருமணத்தின் போது சடப் பொருளாகவும், கணவனிற்கு உடமை கையளிப்பாகவும் இருந்த முறையை மாற்றி ஈஜாப் - கபூல், வலி பெண்ணின் விருப்பு போன்றவற்றினை ஏற்படுத்தியது. மேலும், பெண்களுக்கு திருமணத்தின் பின்னரான இல்வாழ்வு உரிமை, சுதந்திரம், கணவன் திருமண வாழ்வு பிடிக்காத போது தகுந்த காரணங்களுடன் விவாகரத்து பெறும் உரிமை, விவாகரத்துப் பெற்றால் மஹரினைப் பெறும் உரிமை, விவாகரத்தின் பின்னரான வாழ்க்கை கொடுப்பனவு பெறும் உரிமை, மறுமணம் முடிக்கும் உரிமை உட்பட திருமணத்துடன் தொடர்புடைய உரிமைகளை வழங்குவதனூடாக சமூகக் கட்டமைப்பில் இஸ்லாம் மாற்றத்தினை ஏற்படுத்தியது. மேலும் அரேபியாவில் உட்பட பலதாரணத்தினை ஊக்குவித்ததுடன், விதவைகளிற்கான மறுவாழ்வளித்தத்தலானது சமூகக் குற்றங்களைக் குறைப்பதற்கும் வழிவகைகளினை ஏற்படுத்தியது.

**அரேபியாவில் சமூக நிறுவனமான குடும்பமும் அதன் நிலையும் இறைத்தூதர் ஏற்படுத்திய மாற்றங்களும்**

சமூக நிறுவனமான குடும்பத்தின் கட்டமைப்பில் சீர்திருத்தம் மற்றும் மாற்றத்தின் பொருட்டு நற்பண்புகளை அணிகலண்களாக ஆக்கினார்கள். இறைத்தூதரிய அழைப்புப் பணியானது இஸ்லாத்திற்கு முன்னரான சமூக வாழ்க்கை முறையின் நற்பண்புகளான விருந்தோம்பல், தைரியம், வாக்குறுதியை நிறைவேற்றல் என்பவற்றை ஊக்கப்படுத்தியதுடன், தீய பண்புகளினை சமூக வாழ்க்கை முறையிலிருந்து இல்லாமல் செய்தது. அரேபிய சமூக கட்டமைப்பில் கோத்திர வெறி, கோத்திரத்துக்காக எதையும் செய்யும் பண்பு, மனசாட்சி அற்ற தன்மை, மதுப்பிரியர்களாக இருந்தமை, சூதாட்டம், விபச்சாரம், சிலை வணக்கம், வழிப்பறிப் பொருட்களினைத் திருடுதல், கொலை, கொள்ளை, வெட்கமின்மை (உ-ம் :- கஅபாவை இருபாலாரும் நிர்வாணமாக வலம் வந்தமை, உயிருடன் குழந்தைகளைப் புதைத்தல் போன்ற தீயபண்புகளினைக் கொண்டிருந்தார்கள். இத்தகைய சூழ்நிலையில் இறைத்தூதர் அழைப்பணியானது 23 வருடங்களில் இவற்றில் நிலைமாற்றத்தினை ஏற்படுத்தியது. நபிகள் நாயகம் மக்களின் சிலை வணக்கத்திலிருந்து தூரப்படுத்தினார்கள், நபிகள் மூட நம்பிக்கைகளிலிருந்து தூரப்படுத்தினார்கள்(அலி கப்பார் : 2010). இறைத்தூதர் தனது முன் மாதிரி (குர்ஆன் :20,21), நற்குணம்(குர்ஆன் : 68:4), இறைவனால் அகிலத்துக்கு அருட்கொடையாக (2:107) அனுப்பப்பட்டார்கள். இறைத்தூதர் கருணைமிக்க சமத்துவம் (குர்ஆன் 9:13), பெருந்தன்மை(குர்ஆன் 3:159), பணிவுத் தன்மை (குர்ஆன் 25:63), மன்னிக்கும் குணம் (குர்ஆன் 7:139), அன்பு போன்றவற்றின் மூலம் உலகிற்கு முன்மாதிரியான ஒரு சமுகத்தினைக் கட்டியெழுப்பினார்கள். மேலும் இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் சமூக மாற்றவியலை ஜ.்.பர் இப்னு அபீதாலிப் (ரழி) அவர்களுடன் தொடர்புபடும் ஒரு சம்பவம் சான்றுப்படுத்தப் போதுமாதாகும். எத்தியோப்பிய மன்னரிடம் அவர் இவ்வாறு சான்றுரைத்தார்:"நாங்கள் சிலைகளை வணங்கக்கூடியவர்களாக, தீய குணாதிசயங்களால் நிரம்பிய, இரத்த உறவினைத் துண்டித்தவர்களாக, அண்டைய வீட்டார்களை மறந்தவர்களாக, பலவீனமானவர்களிடம் பலவந்தப்படுத்தி பறித்து சாப்பிடக்கூடியவர்களாக இருந்தோம். நபிகளார் வந்ததும் உண்மை உறவை சேர்ந்து

நடத்தல், அமானிதம், ஏகத்துவம், தந்தையர் வணங்கிய சிலைகளை வணங்குவதினை தடுத்தார்''(இப்னு இஸ்ஹாக்- 195-196, அஹ்மத் 22 பக்கம்). இந்நபிமொழி இறைத்தூதர் சமூகக் கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றத்தினைச் சான்றுபடுத்துகின்றது.

**குடும்ப நிறுவனமும் கோத்திரவியலும், இஸ்லாம் ஏற்படுத்திய மாற்றங்களும்**

உலகில் பொருளாதாரம், சமூகப் பின்புலம் மற்றும் பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு சமூக அடுக்கமைவானது தீர்மானிக்கப்பட்டுகின்றது. இவற்றுக்கு அப்பால் அரேபிய சமூகக் கட்டமைப்பில் அடுக்கமைவானது வாழ்வில் கோத்திர உணர்வு ஆழமாக வேரூன்றியதாகக் காணப்பட்டது. அவர்கள் தெளிவான பரம்பரை, இரத்த உறவு, கோத்திர ஐக்கியம் போன்ற பண்புகளைக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு குடும்பமும் இணைந்து ஒரு தொகுதியாகவும்(ஹய்யா), பல தொகுதிகள் இணைந்து ஒரு கோத்திரமாக இருந்தது. குலப்பெருமை, கோத்திர உணர்வு, சரியோ பிழையோ கோத்திரத்துக்குச் சார்பாக இருத்தல், வறுமை பஞ்சம் மற்றும் சண்டைகளின் பொது தனிமனிதர்களைப் பாதுகாத்தல், கோத்திரத் தலைமை மற்றும் அதற்குக் கட்டுப்படுதல், தங்களது கோத்திரத்தில் குற்றத்திற்கான தண்டனை, சிறிய பலவீனமான குழுக்களினைப் பலமான குழுக்கள் உள்வாங்கிக்கொள்ளல், அற்ப விடயத்துக்கு பல தசாப்தங்களாகச் சண்டை (ஒட்டகையை காயப்படுத்தியதாக அஸ்ர், கஜ்ரத் கூட்டத்தாரிடையே 40 வருடங்கள் சண்டையிட்டமை) போன்றவற்றினைக் கொண்டதாகக் கோத்திரங்களின் பணிகள் காணப்பட்டன. ஆகவே அரேபிய சமூக அடுக்கமைவில் முக்கியமாகச் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாக(அஸபிய்யா) கோத்திரவியல் காணப்பட்டது(அமீன்.எம்.எம்,2019). இதனை வரலாற்று ஆசிரியர் ''ஜோசப் கெல்'' குறிப்பிடுமிடத்து '' அவர்கள் தேசிய ஒற்றுமை என்பதில் சேர்ந்திருக்கத் தவறினார்கள். தமது குலம், தமது கோத்திரம் என்ற ஒன்றிணைவையே பெரிதாக மதித்தார்கள். அரபு நாடு என்ற வகையில் ஒருமைப்பாட்டுக்கான எதனையும் செய்யவில்லை'' எனக் குறிப்பிடுகின்றார். அரேபிய குடும்ப,சமூகச் சூழலில் கோத்திரவியல் முக்கிய செல்வாக்குச் செலுத்தியுள்ளது எனலாம்.

**குடும்ப நிறுவனமும் சமூக சமமீன்மையும் இஸ்லாம் ஏற்படுத்திய மாற்றங்களும்**

அரேபியச் சமூகச் சூழலில் சமூகக் கட்டமைப்பில் ஆண்டான் - அடிமைச் சமூக முறைமை காணப்பட்டதுடன், இதனை மையமாகக் கொண்ட பொருளாதார அமைப்புக் காணப்பட்டது. இதனை வலுப்படுத்தும் கருத்தாக சமூகவியலாளரான சொரோகின் சமூக அடுக்கமைவு இல்லாத உண்மைச் சமூகத்தினை உணரக்கூடிய சமூகம் மானுட வரலாற்றில் சாத்தியமற்று என்கின்றார். ஆனால் இஸ்லாம் இறைத்தூதரிய மதீனாவில் அதனைச் சாத்தியமாக்கியது. அரேபியாவில் அடிமையை ஒருவர் கொண்டிருத்தல் என்பது செல்வம், சொத்தாகக் கருதப்பட்டது. அரேபியாவின் செல்வந்தக் குடிகள், குழுத் தலைவர்கள் தங்களது உழைப்பிற்காகவும், வாழ்வாதாரத்திற்கான மனித இயந்திரமாக, இன்ப நுகர்ச்சிக்காகவும், தேவையான சந்தர்ப்பத்தில் விற்கவும், வாங்கவுமான விற்பனைப் பண்டமாக அடிமைகளைப் பயன்படுத்தினர். அடிமைகளையும், அதன் வழி அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் அடிமைகளாகக் காணப்பட்டனர். மேலும், ஆண்டான்-அடிமை முறையின் கீழ் அடிமைகள்

தங்களது உழைப்பிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டனர். மட்டுமன்றி அடிப்படை மனிதனுக்குரிய சுதந்திரமற்றவர்களாக, உரிமையற்றவர்களாக் காணப்பட்டனர். இதனை சான்றாக இஸ்லாத்தினை ஏற்ற போது ஏஜமான்களினால் கடுமையான சித்திரவதைக்குள்ளாமை சான்றுபடுத்துகின்றது. ஆகவே அரேபியாவில் பொருளாதாரக் குழுக்களாக முதலாளிகள், மத்தியதரம் மற்றும் அடிமை ஆட்கள் என்பனவாகும். மேலும் சமூகக் கட்டமைப்பினையும் மற்றும் சமூக வாழ்வியலானது ஆண்டான் - அடிமைச் சமூக முறைமை மூலம் சமமற்று காணப்பட்டது.

இத்தகைய சூழலில் இஸ்லாமிய அழைப்பணியை இறைத்தூதர் ஆரம்பித்தார்கள். கோத்திர வெறியிலும், ஆண்டான் - அடிமையிலும் சின்னாப்பின்னமாகிப் போயிருந்த நிலையில் இஸ்லாம் சமத்துவத்தினை, நீதியை நோக்கி அழைத்தது. படைத்தவனின் பார்வையில் அனைவரும் சமமானவர்கள் என்ற கோட்பாட்டினூடாக அழைத்தார்கள். ‘‘மனிதர்களே உங்கள் அனைவரையும் நாம் ஒரு ஆண், பெண்ணிலிருந்து படைத்தோம். பின்னரே ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களினை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். எனினும், உங்களில் எவர் இறையச்சம் உள்ளவராக உள்ளாரோ அல்லாஹ்விடம் உயர்ந்தவர் (49:13). இதனைத் தழுவியதாக இம்னு உமர் (ரழி) அவர்கள் நபிமொழி நிச்சயமாக ஜாஹிலிய்யாக் கால நடைமுறையை அல்லாஹ் நீக்கிவிட்டார்(நபிமொழி). என்ற கூற்று சான்றாகின்றது. இறைத்தூதர் நபிமொழியில் அல்லாஹ் நீதியான, த.்.வான மனிதனையே மதிக்கின்றான் (திர்மிதி 2270). மேலும், ஒருமுறை நபித் தோழர் ஒருவர் இன்னொருவரைப் பார்த்து மனம் வருந்தும் வகையில் கறுப்பியின் மகனே! என அழைத்த போது முன்னைய அறியாமைக் காலத்திலா இருக்கின்றீர்கள்? எனக் கண்டித்தார்கள்(நபிமொழி). ஆகவே சமூக சமமீன்மையை குடும்ப அலகிலிருந்து சமூகம் வரைக்கும் இல்லாதொழித்தமை சான்றாகின்றது.

மக்கள் குழுக்களுக்கு இடையே அடுக்கமைப்பாடற்ற சமத்துவமீன்மையே சமூக அடுக்கமைவு (Social Satificasation ) என சமூகவியலாளர் அன்டனி கிடன்ஸ் (Antony Giddens) குறிப்பிடுகின்றார். இறைத்தூதர் சமூகக் கட்டமைப்பினை அடுக்கமைவற்றதாகவும், சமத்துவத்தினை நோக்கி அழைத்ததுடன், மட்டுமன்றி முழு உலகிற்கும் அடுக்கமைவற்ற சமூகத்தினை உருவாக்கி முன்மாதியாகத் திகழ்ந்தார்கள். ‘‘இறைவன் முன் மனிதர்கள் யாவரும் சமமானவர்கள்’’ என்ற சமத்துவக் கோட்பாட்டினைச் சமூகத்தளத்தில் பிரயோகித்தார்கள். அடிமைகளினைப் பணம் செலுத்தி விடுதலை செய்தல், அடிமைகளினை விடுதலை செய்வதினை ஊக்குவித்தல், குற்றத்திற்கான பரிகாரமாக அடிமை விடுதலை போன்றவற்றினைக் கொண்டு அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. மேலும், பிரமாண்டமான சமூக உருவாக்கத்திற்காக அடிமைகள், ஏழைகள், நலிவுற்றவர்கள், சமூக ரீதியாக புறக்கணிக்கப்பட்டவர்கள் என அனைவரையும் உள்ளீர்ப்பு செய்ததாகவும், சமூக அந்தஸ்து, சமத்துவத்தை இஸ்லாம் வழங்கியது. இன, மத, நிறம் மற்றும் பல்வேறுபட்ட வேறுபாடுகளைக் கடந்து இறை இல்லத்தில் அனைவரும் நுழைந்து, தோளோடு தோள் சேர்ந்து ஒரே வரிசையில் இறைவனின் அடிமை என்பதினை இஸ்லாம் பறைசாற்றியது. மேலும், அடிமை சந்ததியை ஏனைய சந்ததிக்கு திருமணம் முடித்தல், நிற வேறுபாடுகளைக் கடந்து திருமணம் முடித்தல் போன்ற சமூக சமத்துவத்தினை நிலைநாட்டியதுடன் சமூகப்

பலவீனர்களினையும் மீட்டெடுத்தது. இறைத்தூதரியப் போதனையானது அனைவரும் ஒரே குலம், ஒருவருக்கு ஒருவர் சகோதரர்கள், இறைவனிடம் அனைவரும் கண்ணியமானவர்கள், இறைவனே அனைவரையும் படைத்தமை, ஆதாம், ஹவ்வாவின் பிள்ளைகளே முழு மானுடர்கள் போன்றவற்றின் மூலம் சாதி, மத, நிற, இன பேதமற்ற சமூகத்தினை 23 வருடங்களில் உருவாக்கினார்கள்.

**குடும்ப நிறுவனமும் அரேபியாவில் பதவி நிலையும் இஸ்லாம் ஏற்படுத்திய மாற்றங்களும்**

அரேபியாவில் சமூக அடுக்கமைவில் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாகப் பதவி காணப்படுகின்றது. சமூகவியலாளரான மக்ஸ் வெபர்(1864) சமூக அடுக்கமைவானது செல்வம் (welth), கௌரவம்(presting). அதிகாரம்(power) என்பவற்றால் தீர்மானிக்கப்படுகின்றது. மேலும் மாக்ஸிய தந்தை கால்மார்க்ஸ் சமூக அந்தஸ்தானது வகுப்பு(class), அந்தஸ்து(status), அரசியல் (poltical) ஆகிய கட்டமைப்புக்களினால் ஏற்படுகின்றது என்கின்றார். அரேபிச் சமூகக் கட்டமைப்பில் தமது கோத்திர அந்தஸ்துக்காக எதையும் செய்யக்கூடியவர்களாக இருந்துள்ளனர். கோத்திரத்திற்காக அநியாயமான அல்லது நியாயமான விடயமான இருந்தாதலும் உதவுக் கூடியவர்களாகக் காணப்பட்டனர். இத்தகு சூழலில் பதவி நிலை அதிகாரத்தில் உள்ளவர்கள் அதிகாரம், கௌரவம் என்பதற்கு அப்பால் இஸ்லாம் நேர்மையாக நடக்கச் செய்ததுடன், அல்லாஹ்விற்கு மாத்திரம் அஞ்சுதல், அனைவரும் இறைவன் முன் அடிமை என்றதன் மூலம் பதவியில் இருப்பவர்களின் ஈகோவை இஸ்லாம் தணித்தது. சமூகநீதி, சமூக சமத்துவம், மக்கள் தங்களுக்கு விருப்பமானவர்களைக்கு பதவியை வழங்குதல், பதவியில் உள்ளவர்கள் இறைவனுக்கு பொறுப்புக்கூறல் போன்றன விடயங்களையும் உட்புகுத்தியது.

**அரேபியாவில் சமூக நிறுவனமான சமயமும், அதன் நிலையும் இறைத்தூதர் ஏற்படுத்திய மாற்றங்களும்**

இஸ்லாம் அரேபிய சமூகக் கட்டமைப்பில் ஏற்படுத்திய முக்கிய மாற்றம் சமய நிறுவனத்தில் ஏற்படுத்திய மாற்றமாகும். அரேபியர்கள் குலக்குறிகளான மரங்கள், கோள்கள், சூரியன், நட்சத்திரம் மற்றும் புனிதப் பொருட்களை வணங்கினர். மேலும் ஹனீப்கள், முஷ்ரீகின்கள், யஹுதிகள், கிறிஸ்தவர்கள், மஜீசிகள், சாபிஈனிலம், மதஸ்டிக் இனம், மானிசம் போன்ற மதப்பிரிவுகள் காணப்பட்டன. மேலும், எதிர்காலத்திற்காக அம்பு பார்த்தல், குறிபார்த்தல், இரகசியம் சொல்லல், சாத்திரம் பார்த்தல், சகுணம் பார்த்தல் போன்ற நம்பிக்கையைக் கொண்டிருந்ததுடன், அல்லாஹ்வைத் தவிர வேறு நபர்களுக்குப் பலியிடுபவர்களாகவும், அல்லாஹ்வைத் தவிர ஏனையவற்றுக்குத் தியாகம் செய்பவர்களாகவும் காணப்பட்டனர். மேலும், அரேபிய சமூகக் கட்டமைப்பில் எந்தவொரு மதத்தினையும் ஏற்றுக் கொள்ளாமைப் பற்றி இமாம் இப்னு கதீர் அவர்கள் "அல்பிதாயா வன்னிஹயா" யாவில் குறிப்பிடுமிடத்து முன்னர் அனுப்பிய நபிமார்களினை நம்பாமை, தவ்றாத் மூஸா நபியின் உள்ளடங்களினை நம்பாமை, நபி அல்லது தூதர் இன்மை, அரேபியாவிற்கு பல்வேறு மதங்கள் பரவியமை, பேப்ரியன் மேகி மதத்தினைப் பரப்பியமை,

வெளியிடங்களில் இருந்து வழிபாடுகளினைக் கொண்டு வந்தமை (சிலை வணக்கம்) என்பவற்றினைக் குறிப்பிடலாம்.

இஸ்லாமானது இறைவன் அல்லாஹ் ஒருவன் எனவும், அவனுக்கு இணையாக எதுவுமில்லை எனவும், முஹம்மது (ஸல்) இறைவனின் இறுதித் தூதர் எனவும் அழைத்தது. எந்தவித போராட்டமும், ஆயுத முனையுமும் இன்றி, நிர்ப்பந்தமுமின்றி மக்கள் குறுகிய காலத்தில் இஸ்லாத்தில் நுழைந்தமை உலக வரலாற்றில் சமயப் பரவுகையில் மாற்றமாகும். மேலும், மார்க்கத்தில் எந்தவித நிர்ப்பந்தமும் இல்லை(குர்ஆன் 2:265). என்பதற்கமைய அவரவர் தங்களது சமயத்தினைப் பின்பற்ற அனுமதி வழங்கப்பட்டது. மேலும் இறைத்தூதரிய கைவசம் அரேபியா ஆட்சிக்குப்பட்டும் இஸ்லாத்தை ஏற்குமாறு நிர்ப்பந்தம், பலவந்தப்படுத்தலின்றி சுதந்திரம் இருந்தது. நஜ்ரானி கிறிஸ்தவ மதகுருவினைப் பள்ளியவாயலில் பிராத்தனைப் புரிய அனுமதித்ததுடன், பள்ளிவாசலில் வெளிநாட்டினைச் சேர்ந்தவர்களினை வரவேற்கும் தூதுவராலயமாகவும் இறைத்தூதர் பயன்படுத்தினார்கள். சமய சுதந்திரம், சிறுபான்மைக் காப்பீடு, மஸ்ஜிதை அடிப்படையாகக் கொண்ட சமூகச் செயற்பாடுகள், சமூகப் பங்கேற்பில் அனைத்துக் குழுக்களுக்கும், மதங்களிற்கும் வாய்ப்பு என்பன சமூக நிறுவனமான சமயத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் சிலவாகும்.

## அரேபியாவில் சமூக நிறுவனமான பொருளாதாரமும், அதன் நிலையும் இறைத்தூதர் ஏற்படுத்திய மாற்றங்களும்

இறைத்தூதரிய தூதுத்துவத்திற்கு முன்னர் அரேபியச் சமூகத்தின் சமூகக் கட்டமைப்பிலும், சமூக அடுக்கமைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக செல்வம் மற்றும் பொருளாதார நிலைக் காணப்பட்டது. குறிப்பாக சமூக நிறுவனங்களில் பொருளாதார நிறுவனமானது ஏனைய நிறுவனங்களினை விட முக்கியமான ஒன்றாகவும், மனித தேவை மற்றும் விருப்பங்களினை நிறைவேற்றும் கருவியாகவும் உள்ளது. குறிப்பாக சமூக அடுக்கமைவுக்கான காரணியாகவும், சமூக மாற்றத்தினை ஏற்படுத்தும் ஒன்றாகவும் உள்ளது. இறைத்தூதுத்துவத்திற்கு முன்னர் அரேபியச் சமூகத்தில் அதிகமான வாழ்வாதாரச் சொத்துக்கள் மற்றும் மூலதங்களைக் கொண்டிருத்தல், அடிமைகளினைக் கொண்ட செல்வந்த குழுவினரும், பணக்கார வியாபாரிகளே இக்குழு இருந்தது. மேலும், அவர்களின் வேலையாட்களாக (வியாபாரம், கைத்தொழில்) ஆகிய நடுத்தர பொருளாதாரக் குழுவும், அடுத்து கொள்ளையடித்தல், விட்டி, நாடோடிகள், விபச்சாரம், வழிபறிகள் போன்ற தொழில்களிலும் ஈடுபட்டனர்.ஆகவே, இறைத்தூதர் ஆகுமான பொருளீட்டலினை அனுமதித்ததுடன், ஆகாதவற்றினைத் தடை செய்தார்கள். அரேபியாவில் இஸ்லாத்திற்கு முன் பதுக்கல், திருடுதல், கொள்ளையடித்தல், சூதாடுதல், விபச்சாரம், கலப்படம், அளவு – நிலுவை மோசடி, அதிக வட்டி, அதிக இலாபமீட்டல் போன்ற பொருளீட்டலில் காணப்பட்ட முறைகளையும் இது சார்ந்த பொருளீட்டலினையும் இறைத்தூதர் இல்லாமலாக்கினார்கள். பொருளீட்டலின் போது ‘‘சொத்துக்கள் அனைத்து இறைவனுக்குரியது மனிதன் இறைவனின் பிரதிநிதி’’ என்பதுடன் இக்கோட்பாட்டுக்கமைய பொருளீட்டலினையும் தேவையுடையவர்களுக்கு ஸகாத், ஸதகா, பித்ரா மற்றும் பல்வேறுபட்ட வகையிலும் வழங்குமாறு வசதி படைத்தவர்களுக்கு கட்டளையிட்டார்கள். மேலும், நீதி, நேர்மை,

வாக்குறுதியை நிறைவேற்றல், ஆகுமான பொருட்களினை விற்றல், மென்மை என்பவற்றினை கொண்டு பொருளீட்டளினை வலியுறுத்தியதுடன் பதுக்கல், அதிக விலை, கலப்படம், பொய் சத்தியம் செய்து விற்றல் என்ற பலவற்றினைத் தடை செய்தது. மேலும், நல்ல வியாபாரி இறைத்தூதருடன் நாளை மறுமையில் என்னோடு இருப்பார் என சுட்டிக்காட்டியதன் மூலம் வாழ்க்கையை (இபாதத்தாக) வணக்கமாக இஸ்லாம் மாற்றியது.

**அட்டவணை 01 : மனித நலனோம்பல் சார்ந்த பல்வேறு வகைகள்**

<table>
<tr><th>வகைகள்</th><th colspan="2">நலனோம்பலின் நோக்கங்கள்</th></tr>
<tr><td>ஸகாத்</td><td colspan="2">செல்வத்தின் நிஷாபினை அடைந்து தங்களது பொருளிலிருந்து கணக்கிட்டு குறிப்பிட்ட குழுவிற்கு வழங்குதல்(குர்ஆன்2.223) இது மூன்றாவது கட்டாயக் கடமை</td></tr>
<tr><td>ஸதகா</td><td colspan="2">சகோதரனைப் பார்த்து புன்னகைத்தல்,நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல், ஒருவருக்கு வழிகாட்டுதல், வீதியில் தடைகளை ஏற்படுத்தும் பொருளை அகற்றுதல், தாகத்துக்கு தண்ணீர் புகட்டுதல், பார்வையற்ற மனிதனுக்கு வழிகாட்டுவது என்பன (சதகா) தர்மமாகும்(திர்மிதி – 594).</td></tr>
<tr><td>பித்ரா</td><td colspan="2">ரமலான் நோன்பு முடிவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பிருந்து வழங்கப்படும் தர்மமாகும். தனக்கும் தனது பொறுப்பில் உள்ளவர்களுக்கும் வழங்க வேண்டும். (புகாரி முஸ்லிம்)</td></tr>
<tr><td>அகீகா</td><td colspan="2">குழந்தை பிறந்து ஏழாவது தினம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் முகமாக ஆட்டினை அறுத்துக் கொடுத்தல்.</td></tr>
<tr><td rowspan="3">குற்றப்பரிகாரம்</td><td>ரமழான் நோன்புடன் உடலுறவு</td><td rowspan="2">1. ஒரு அடிமை விடுதலை அல்லது இரண்டு மாதம் நோன்பு, அறுபது 2.ஏழைகளுக்கு உறவு – பத்து ஏழைகளுக்கு உணவு பத்து ஏழைகளுக்கு 3. அடிமை விடுதலை.(குர் 5:89)</td></tr>
<tr><td>சத்தியத்தினை முறித்தல்</td></tr>
<tr><td>மாதவிடாய் காலத்தில் பெண்ணுடன் உறவு</td><td>ஒரு தங்கம் அல்லது அரைத் தங்கம் வழங்க வேண்டும்(அஹ்மத், திர்மிதி).</td></tr>
<tr><td>நேர்ச்சை</td><td colspan="2">அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்றல் அல்லது உறுதி பூண்ட விடயத்தை நிறைவேற்றல்</td></tr>
<tr><td>மனைவியைத் தாய்க்கு(ளிகான்) ஒப்பிடல்</td><td colspan="2">குற்றத்திலிருந்து நீங்குதல் அடிமை விடுதலை அல்லது இரண்டு மாத நோன்பு அல்லது அறுபது ஏழைகளுக்கு உணவு</td></tr>
<tr><td>குர்பான்</td><td colspan="2">இறைவனுக்கு துதி செய்யும் பொருட்டு துல்ஹஜ் மாதம் ஆடு, மாடு, ஒட்டகங்களை அறுத்து பலியிடல். (22:37) இதிலிருந்து உங்கள் வேலைகளுக்கு வழங்குங்கள்.(22:18)</td></tr>
<tr><td>வக்ப்</td><td colspan="2">குறிப்பிட்ட காரணத்துக்காக இது குறிப்பிட்ட நபரின் விருப்பத்திற்கு ஏற்ப வழங்கப்படும் நலன்புரி செயற்பாடு.</td></tr>
<tr><td>ஸதகா ஜாரிய்யாய்யா</td><td colspan="2">மறுமை நன்மைக்காக நிலையான ஒரு செயற்பாடு.</td></tr>
</table>

| | |
|---|---|
| **பீசபிலில்லாச்** | குறித்த ஒன்றினை இறைவழியில் தூய்மையின் பொருட்டு அளிக்கும் செயலாகும் மத்ரஸா, பொதுக்கட்டடம், பாடசாலை உட்பட எதுவாக இருந்தாலும் சரி. |

மூலம் :- ஆய்வாளனினால் தயாரிக்கப்பட்டது.

இவ்வாறான பொருளாதார அடுக்கமைவுக்குபட்ட சூழலில் இறைத்தூதர் சமூக சமத்துவத்தினை நோக்கிய பொருளாதாரப் பொருளீட்டல் மூலம் அதனை வழங்கலிற்கான நுட்பங்கனையும் (ஸகாத், ஸதகா உட்பட பல) அறிமுகப்படுத்தினார்கள். மேலும் நலன்புரி மற்றும் சமூக நலனோம்பலுக்கு இஸ்லாம் அதிக நன்மை கூலியை மூலம் ஊக்குவித்தது. ஒரு அமலுக்கு 10 மடங்கு நன்மை உண்டு(அல்ஆன்ஆம் 6:160) வழங்குதுதல் எனக் குறிப்பிடுவதுடன், ஒரு நாய்க்கு நீரூட்டியதினால் சுவனமும் (புகாரி – 3551) கூலியாக்கப்பட்டதுடன், இறைவன் நன்மை ஒரு கதிருந்து ஏழு நெற்கள் போன்ற நன்மையை அதனூடாக அறுவடையளவு நன்மையை வழங்குகின்றான்(குர்ஆன்). மேலும் தர்மம் செய்யும் ஆண்களும், தர்மம் செய்யும் பெண்களும், அல்லாஹ்வுக்காக அழகான கடனாகக் கடன் கொடுத்தார்களே, அவர்களுக்கு அது இரு மடங்காக ஆக்கப்படுகின்றது. இன்னும் அவர்களுக்கு மிக்க கண்ணியமான நற்கூலியும் உண்டு.(அல்-ஹதீத்- 18) போன்ற பிறர்நலன், உதவி, நலன்புரி விடயங்களுக்கு அதிக கூலியென்பதினைச் சான்று பகிர்கின்றன. இஸ்லாத்தின் சமூக நலன்புரி மற்றும் தொண்டின் பொருட்டு வெவ்வேறு வடிவங்கள் ஊக்குவிக்கின்றது. பொருளாதாரம் என்பது இறைவனுக்கு வழங்கிய அருட்கொடையாக இருப்பதுடன், தேவைப்படும் அனைவருக்கும் பகிரப்படுதலே இஸ்லாத்தின் கொள்கையொன்பதினை இறைத்தூதர் செயல்வடிவமாக்கினார். இறைத்தூதர் மனித நலனோம்பலின் பொருட்டு பல்வேறு வடிவங்களிலான செயற்பாடுகளை ( அட்டவணை - 1)அமுலாக்கம் செய்தததது.

**அரேபியாவில் பால்நிலையும், அதன் நிலையும் இறைத்தூதர் ஏற்படுத்திய மாற்றங்களும்**

உலகில் தொன்மை நாகரீகங்கள் மற்றும் அரபு உலகில் இஸ்லாத்திற்கு முன்னர் பெண்ணானவள் அடிமையாகவும், சொத்துரிமையற்றவளாகவும், அசுத்தமானவளாக விற்பனைப் பொருளாகவும் கருதப்பட்டாள். அதேசமயம் திருமணத்திற்கு முன் உரிமையற்றவளாகவும், திருமணத்திற்கு பின் கணவனின் உடமைப் பொருளாகவும், கணவன் இறந்ததன் பின்னர் கணவன் சகோதரர்களின் உடைமையானவளாகவும், மேலும் கணவன் மரணித்ததுடன் சில நாடுகளின் நடைமுறையாக மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. எனவே, பால்நிலைச் சார்ந்த சமூகக் கட்டமைப்பில் ஆணும்,பெண்ணுக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமிடையிலான சமத்துவமின்மை, வேறுபாடின்மை நிலவியது. குறிப்பாக நாகரீகம் தோற்றம்பெற்ற மையங்களான கிரேக்கத்தில் பெண்ணை வியாபாரப் பொருயாகவும்,ரோமானியர்கள் உயிரற்றவளாவும், அசுத்தப் பிராணியாகவும், இந்தியர்கள் கணவன் இறந்தால் பெண் உடன்கட்டை ஏறும் வழக்கமாவும், சீனர்கள் நற்பாக்கியம், செல்வத்தினை பெண் அழித்து விடுபவள் மேலும் ஆன்மா இல்லை எனவும்,யூதர்கள் - பெண் சாபத்திற்குரியவள் எனவும் சிறுமைப்படுத்தினர்.

இஸ்லாமானது. இறைத்தூதரிய போதனையுடாகப் பெண்ணுக்கு வரதட்சணைக்குப் பதிலாக மஹர் கொடையையும், திருமணத் தெரிவுச் சுதந்திரத்தையும் வழங்கியது. பெண் என்ற

வகிபங்கு, அந்தஸ்து, உரிமை, சுதந்திரம் என்பவற்றினை இஸ்லாம் 1400 ஆண்டுகளுக்கு முன்னே உறுதி செய்தது. இஸ்லாம் இறை நம்பிக்கை மற்றும் சமூக நீதியுடாக பெண்களின் அந்தஸ்தினை உயர்த்தியது. பெண்களுக்கு நன்மை நாடுமாறும்(முஸ்லிம்-2914), நல்ல முறையில் நடக்குமாறும்(புகாரி- 5186), மனம் மனம் நோகவும், பலர் அறியத்தண்டிக்க கூடாது(அபூதாவூத்-1830,அஹ்மத்-19162) எனவும், விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளுமாறும்(குர்ஆன் 2:237), வீட்டு வேலைகளில் ஒத்தாசையாகவும்(புகாரி-676), அவர்கள் மீது வீண்பழி சுமத்தினால் 80 கசையடி(குர்ஆன்: 24.4)வழங்குமாறும், பள்ளிக்கு தொழுவதற்கு சென்றால் தடுக்கக் கூடாது(முஸ்லிம்- 753) எனவும், மேலும் மனைவியுடன் நல்ல முறையில் நடப்பவரரே உங்களில் சிறந்தவராகவும்( திர்மிதி-1082), தன் மனைவியை முழுமையாக ஒதுக்க வேண்டாம்(முஸ்லிம்-2912) எனவும், உங்களில் சிறந்தவர் மனைவியிடம் சிறந்தவர் (இப்னுமாஜா- 2053). போன்றன பெண்ணிய அந்தஸ்தினை இறைத்தூதரிய சமூகத்தில் வெளிக்கொணர்கின்றது.

குறிப்பாக இஸ்லாம் ஏற்படுத்திய சமூகக் கட்டமைப்பு மாற்றமாக பால்நிலைசார் அடுக்கமைவுச் சமத்துவமாக்கியதாகும். அரேபியச் சூழலில் ஆணாதிக்கவாத நிலை மேலோங்கி இருந்ததுடன், பெண் இன்ப நுகர்ச்சிப் பொருளாகவும், சொத்துக்களுக்கு உரிமையற்று விற்பனை காட்சிப் பொருளாகவும், கணவனிடம் இருந்து விவாகரத்துப் பெற முடியாத கணவனின் உடமை பொருளாகவும் காணப்பட்டாள். பெண் குழந்தைகள் பிறந்ததும் வறுமைக்கு பயந்து உயிரோடு புதைத்தார்கள். ஜாஹிலியயக் காலத்துப் பெண்பால்நிலைசார் நிலையிலிருந்தும், ஆணாதிக்க சர்வதிகாரத்திலிருந்தும் இறைத்தூதர் மாற்றியமைத்தார்கள். இஸ்லாம் பெண்ணினை ஆணுக்கு நிகராகவும்,(குர்ஆன், 2:228) பெண்ணுக்குரிய உரிமைகளினை வழங்கியது. எனவே, இறைத்தூதரிய அழைப்பணி பெண்களுக்குரிய உரிமை, அந்தஸ்து, கௌரவத்தினைப் பெற்றுக் கொடுத்ததுடன், சமூகப் பங்கேற்பிலும் பங்குபற்றினர். இதன் விளைவாக மிகக் குறுகிய காலத்தில் பெண்ணிய விடுதலை சமுக பங்கேற்பு, பால்நிலை அந்தஸ்தினையும் மாற்றத்தினையும் ( அட்டவணை – 2) ஏற்படுத்தியது.

**அட்டவணை 2 :பால்நிலை நோக்கு நிலையில் அரேபியச் சமூகக்கட்டமைப்பில் இஸ்லாம் ஏற்படுத்திய மாற்றங்கள்**

| தலைப்பு | இஸ்லாத்துக்கு முன் | இஸ்லாத்துக்குப் பின் |
|---|---|---|
| **அரேபிய சமூகத்தில்பெண்ணியநிலை** | பெண் விற்பனைப் பொருள்<br>இன்ப நுகர்ச்சிப் பொருள்<br>வறுமைக்கு பயந்து கொலை செய்தல் குர்ஆன் (6:55) (81-8-9) (17:31)<br>ஆணுக்கு சமமாக கருதப்படாமை, பெண்பிறப்பு இழிவாகக் கருதியமை (குர்ஆன்16:58,59)<br>உயிருடன் பெண் குழந்தை கொலை. | ஒரே ஆண் பெண் படைப்பு (குர்ஆன் 48:13) குழந்தையைக் கொலை செய்தல் தடை ஆண், பெண் சமம் (குர்ஆன் 4:1)/பெண் ஆணின் அடுத்த பாதி (நபிமொழி)ஆதமுடையசந்ததியைக் கண்ணியப்படுத்தியப்படுத்தினோம்.(17.10)<br>“இரண்டு மகன்களை நல்ல முறையில் வளர்கிறாறோ இறுதித் தீர்ப்பு நாளன்று என்னோடு இருப்பார்” (முஸ்னத் அஹ்மது). |

| | | |
|---|---|---|
| **தனிமனித உரிமை** | மனிதன் என்ற வகையில் உரிமைகள் மறுப்பு.<br>சொத்துரிமை இல்லை.<br>பெண்கள் கல்வியில் மிளிரவில்லை. | கல்வி உரிமை (9:71), கல்வி இருபாலாருக்கும் கட்டாயக் கடமை குர்ஆன் (4:7),(4-11-12).<br>மார்க்கத்தில் நிர்பந்தம் இல்லை. (குர்ஆன்: 2.256) |
| **திருமண உரிமை** | விரும்பியவரை மணம் முடிக்கும் உரிமை உட்பட திருமண உரிமை இல்லை, விவாகரத்து உரிமை இல்லை. (ஆண்களுக்கு மட்டும் உண்டு) | விரும்பியவரை திருமணம் செய்தல் உரிமை (4:19),மறுமண உரிமை உண்டு. குர்ஆன் (2:232-235),விவாகரத்து உரிமை உண்டு. குர்ஆன் (2:241),திருமண கொடை பெண்ணுக்கு உண்டு குர்ஆன் (4:4),மஹரை விட்டுத் தரும் உரிமை (4:4), மஹரை திருப்பிக் கொடுக்காமல் இருக்கும் உரிமை(2:229),விவாகரத்து உரிமை(2.241)(2.236) |
| **சமூக வகிபங்கு ,அந்தஸ் து** | பெண் குழந்தைப் பிறந்தால் சாபம், ஆண் குழந்தைப் பிறந்தால் விழா எடுத்தல்.<br>பெண்ணுக்குரிய அந்தஸ்து இல்லை. | இஸ்லாத்தில் இருவரும் சமமே.<br>பெண்அந்தஸ்துதாயாக(17:23.∵.24),மனைவி(2:228∴2:186),சகோதரி(9:71)மூலம்:குர்ஆன்பெண்குழந் தையைவளர்த்தல் நரகிலிருந்து காப்பு |
| **பால்நிலைஉரிமை** | பால்நிலை பாராபட்சம்<br>பால்நிலை சமத்துவமீன்மை<br>பால்நிலைசார் அநீதி | விசுவாசிகளே ஆண்களும், பெண்களும் அனைத்திலும்சமம்(குர்ஆன்),சமூகச்செயற்பாடுக ளில் நீதி, சமத்துவம், பாராபட்சமீன்மைஆண் அல்லது பெண் ஈமான் கொண்ட நிலையில் நற்கருமம் செய்தால் சுவனத்தில் நுழைவார்கள் (4:114) |
| **ஆன்மீக உரிமை** | ஆன்மீக உரிமை கேள்விக்குரியது. | ஆன்மீக ஈடுபாட்டில் உரிமை (33:35)<br>இரவில் பள்ளியில் அனுமதி கோரின் அனுமதி வழங்குங்கள்(புகாரி). முஸ்லிம்- 753 |

மூலம் :- ஆய்வாளனினால் தயாரிக்கப்பட்டது.

**அரேபியாவில் சமூக நிறுவனமான அரசியலும், அதன் நிலையும் இறைத்தூதர் ஏற்படுத்திய மாற்றங்களும்**

சமூக நிறுவனமான அரசியல் இறைத்தூதரிய வருகைக்கு முன்னர் அரேபிய அரசியல் முறைமையில் ஆட்சி நிர்வாகத்திற்கான அதிகாரச் சண்டை, கோத்திரங்களினை மையமாகக் கொண்ட தலைமைத்துவ முறை, குறைந்த மக்கள் பங்கேற்பு, குடும்ப அரசியல் முறைமை, ஜனநாயக முறைமை முழுமையாக இன்மை போன்றவற்றினைக் கொண்டிருந்தது. இறைத்தூதர் முகம்மது (ஸல்) அவர்கள் இறைவனது சொல்லினை யாப்பாகவும், தனது வழிகாட்டலினை நெறிமுறையாகவும் கொண்டு சமூகத்தினைக் கட்டியெழுப்பினார்கள். கோத்திரவியல் (அஸபிய்யா) என்ற மிகச் சிறிய இரத்த உணர்விலான சுயநல நுண்ணிலை அமைப்பிலிருந்து ‘‘உம்மா’’ ( சமூகம்) என்ற

பொதுநல மற்றும் அனைவரும் உள்ளடங்கிய பருநிலை சமூகக் கட்டமைப்பினை உருவாக்கினார்கள். ஜனநாயக சிந்தனையின் பரிமாண வளர்ச்சிக்கு அப்பால் தனிநபர் சுதந்திரம், உரிமை, சமத்துவம், கிடைப்பு உறுதிப்படுத்தல், அமைதி நிலையைப் பேணுதல், சிறுபான்மையினரின் மற்றும் நலிவுற்றவர்கள் மீது கவனம் செலுத்துதல், பன்மைத்துவ சூழலினை கவனத்திற் கொண்டதாக மதீனாசாசனம் மூலம் மதீனா அரசினைக் கட்டியெழுப்பினார்கள். மதீனா சாசனம் சமூக ஐக்கியம், சமத்துவம், ஒற்றுமை, தன்மைக்கு எதிரான ஒத்துழைப்பு, எதிரிகள் பற்றிய தீர்மானம் எடுப்பதில் ஒற்றுமை, அரசின் கட்டமைப்பு, சிறுபான்மையினருக்கான உரிமை உட்பட தேவையான விடயங்களினையும் உள்ளடக்கியதாக இருந்தது. இது இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாமிய அரசியல் அடிப்படைகளினை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த சாசனம் மானுடத்தின் சமூக நீதி, மதச்சார்பற்ற தன்மை, சமூக நலனுக்கான பரஸ்பர ஒத்துழைப்பு முதலான அம்சங்கள் விளக்கப்பட்டிருந்தன(முஸ்த.்.பா ஸிபாஈ). இன்றைய ஜனநாயக நல்லாட்சி சார்ந்த அரசியல் பண்புக் கூறுகளை இறைத்தூதர் 1400 ஆண்டுகளுக்கு முன்னே மதீனா அரசின் மூலம் கட்டியெழுப்பினார்கள்.

மக்காவிலும், மதீனாவிலும் சமூக, அரசியல், நிர்வாகம் பெருமளவில் கோத்திரப் பண்பை மையமாகக் கொண்டிருந்தது. கோத்திரம் வழங்கிய பாதுகாப்பில் அதன் உறுப்பினர்கள் வாழ்ந்தனர்(அமீன்.எம்.ஐ.எம், 2019). மட்டுன்றி தென்னாசிய நாடுகள் உட்பட ஏனைய உலகளாவிய ரீதியில் சமூக அடுக்கமைவானது கிடையான ஒன்றாக பிறப்பு அடிப்படையிலான காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஒருவரின் பிறப்பினை மையமாகக் கொண்ட சாதி, தொழில், அந்தஸ்து என்பவற்றால் தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால் அரேபியாவில் இறைத்தூதரிய அழைப்புக்கு முன்னர் கோத்திர உணர்வு மோலேங்கியிருந்தது. அரேபியா இப்னு கல்தூனிய அஸபிய்யாக் கோட்பாட்டு இணங்க கோத்திரவியலை உருவாக்கும் முதல் பங்களிப்பில் முதலாவதாகக் அதிகாரம் விளங்கியதுடன், இரண்டாவதாக தலைமைத்துவம் விளங்கியதுடன், அடுத்து மதமுமாகக் காணப்பட்டது. அதாவது கோத்திரங்களுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ''ஹில்ப்'' என்று வழங்கப்பட்ட பாதுகாப்பு ஒன்றிய அமைப்பும், அயல் கோத்திர வழியமைப்பில் ''ஜீவார்'' கோத்திர அமைப்பும் மையமாக வைத்தே ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோத்திரமும் இரத்த உறவினாலேயே அடிப்படையாகக் கொண்டிருந்தது. கோத்திரங்களிடையே வேற்றுமை உணர்வு மேலோங்கவும், கோத்திர எல்லையைக் கடந்து தேசியமாக மலரமுடியாமைக்கு இரத்த உணர்வுச் சிந்தனை தடையாக இருந்தது எனலாம்(அமீன்.எம்.ஐ.எம்,2019).

அரேபியச் சமூகக் கட்டமைப்பில் முக்கிய ஒன்றான கோத்திரவியல் மக்காவின் நகராட்சியிலும் செல்வாக்குச் செலுத்தியது. குறிப்பிட்ட கோத்திரங்கள் ''ஹில்ப்'' அடிப்படையிலான ஆட்சி, கலந்தாலோசணை முறையின்மை, யாரின் தலையீடு இன்றி தம் பணிகளை முன்னெடுத்தமை, மக்களாட்சி போன்றவற்றினைக் கொண்டிருந்தது. இறைத்தூதரியமானது இந்நிர்வாக முறைக்கு மாற்றமாக மக்களின் தெரிவுக்கு முன்னுரிமை, மக்களினை மையமாகக் கொண்ட யாப்பு முறைமை (மதீனா சாசனம்) கொண்டிருந்தது. நல்லாட்சிப் பண்புக் கூறுகளான சட்டத்தின் ஆட்சி, பங்கேற்றல், கலந்தாலோசனை, கணக்குக் காட்டல், சமத்துவம், போன்றவற்றினைக் கொண்டதாக அமைந்திருந்தது. ஆகவே உலக வரலாற்றில்

மிகக் குறுகிய காலத்தில் சமூகக் கட்டமைப்பில் முக்கிய நிறுவனமான அரசியலில் மாற்றத்தினை ஏற்படுத்தியராக இறைத்தூதர் முஹம்மது (ஸல்) உள்ளார்கள். இதனையே போராசியர் சீ.ஏ. நள்ளினோ ''முஹம்மத் ஏககாலத்தில் மார்க்கத்தினையும், அரசியலையும் கட்டியெழுப்பினார்கள்'' என்கின்றார்.

இறைத்தூதரியத் தலைமைத்துவமானது இஸ்லாத்துக்கு முன்னரும், பின்னரும் உலகில் இற்றைவரைக்கும் இல்லாத சமூக, அரசியல், சமய தலைமைத்துவமாகக் காணப்பட்டது. முவ்வகைத் தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவராகவும், முஹம்மது (ஸல்) திகழ்ந்தார்கள். இறைத்தூதர் தன்னுடன் கூட இருந்தவர்களினை தோழர்களாகப் பார்த்தமை, தன்னைப் புகழ், துதி பாட அனுமதிக்காமை, தனக்கு பின் தொடர்ந்து யாரையும் நடக்க விரும்பாமை, நலிவுற்றவர்கள் மீது கவனம் செலுத்தியமை, நோயாளி மற்றும் தேவையுடையவர்கள் தானே சென்று விசாரித்தமை உள்ளிட்ட நடத்தைக் கோலத்தினைக் கொண்டிருந்தார்கள். மேலும், இறைத்தூதர் சிறந்த அரசியல் தலைமைத்துவமுடையவராகக் காணப்பட்டார். குறிப்பாக அரசியல் தலைமைத்துவம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பண்பு மற்றும் நடத்தை கோட்பாடு சார்ந்த பண்புகளின் மூலம் அரேபிய சமூகத்திலேயே மாற்றத்தினை ஏற்படுத்தினார்கள். தூர நோக்கு, இலக்குகளினை மையமாகக் கொண்ட செயற்பாடு, பேச்சாற்றல், மனித நடத்தையைப் புரிந்து கொள்ளல், தீர்மானம் எடுத்தல், பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல், நேர முகாமை, விரைவான செயற்பாடு, நேர்மை, முன்மாதிரி, மனித வளம் மற்றும் சூழ்நிலைப் புரிந்து கொள்பவர் போன்றனப் பண்புகளினைக் கொண்டவராகக் காணப்பட்டார். இத்தலைமைத்துவப் பண்புகள் முழு அரேபியாவில் குறுகிய காலத்துக்குள் சமூக மாற்றத்தினை ஏற்படுத்தியது. இறைத்தூதர் மதீனத்து நிர்வாக முறையைச் சித்க் (நேர்மை), அமானா(நம்பிக்கை), பதானா(அறிவார்ந்தம்), தப்லீக் (எத்திவைத்தல்) என நாற்பெரும் தூண்களைக் கொண்டதாக கட்டியெழுப்பினார்கள். மேலும் (சித்க்)உறுதி, எளிமை, விசுவாசம், தூய்மைத்தன்மை என்ற பண்புகளைக் கொண்டும், அமானாத் (துல்லியம்), வெளிப்படைத்தன்மை, பகுப்பாய்வு, உண்மை என்ற பண்புகளாலும், பாதானத் ஆன்மிகம், நியாயம், திறந்த மனப்பான்மை ஆகிய பண்புகளைக் கொண்டும், தப்லீக் (அறிவார்ந்தம்), தொடர்பாடல் திறன், தைரியம், உறுதி, செயற்திறன்கள் என்ற பண்புகளையும் கொண்டமைந்திருந்தது(Qadri Suwaibah.M, Qadri , Lubna Ahsan: 2016).

**முடிவுரை**

சமூக நிறுவனங்களான மேற்குறிப்பிட்ட திருமணம், குடும்பம், அரசியல், பொருளாதாரம், சமயம், பால்நிலை உட்பட சமூக நிறுவனங்களின் கட்டமைப்பின் மாற்றங்களுக்கு அப்பால் நிர்வாக கலாசார, சமூக நலன், சமூக அபிவிருத்தி அனைவரினையும் உள்ளீர்ப்பு செய்தமை உள்ளிட்ட எல்லா விடயங்களும் இறைத்தூதரிய வகிபங்கு மெச்சத்தக்கது. 23 வருட இஸ்லாமிய அழைப்பணி முழு உலகமே ஒளியைப் பெற்றதுடன் சபீட்சமடைந்தது. முடிவாக இறைத்தூதரிய சமூக மாற்றம் போன்று இற்றைவரைக்கும் உலகில் யாராலும் ஏற்படுத்தப்படவில்லை எனலாம். இறைத்தூதர் சமூக நிறுவனங்களில் ஆரம்ப நிறுவனமான திருமணத்தில் கட்டுப்பாடற்ற பலதாரமணத்தை நான்காக மட்டுபடுத்தியமை, முறையற்ற திருமண முறைகளை இரத்துசெய்தமை, பெண்கள் திருமணத் துணை தெரிவு உட்பட விவாகரத்து வரையான உரிமைகளை வழங்கியதுடன்,

தொடர்புடைய மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். மற்றுமொரு ஆரம்ப சமூக நிறுவனமான குடும்பத்தில் நற்பண்புகளை ஏற்படுத்தியமை, குற்றத்துக்கான தண்டணை முறை, குடும்பக் கட்டமைப்பில் இஸ்லாமியமயமாக்கியமை, கோத்திரவியலுடன் தொடர்புடைய குலப்பெருமை, கோத்திரவெறி, கோத்திர தலைமை என்பவற்றினை இல்லாமலாக்கியமை, "இறைவன் முன் அனைவரும் சமம்" என்ற தத்துவக் கோட்பாட்டை நடைமுறையாக்கம் செய்தமை போன்றன மூலம் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். சமய நிறுவனத்தில் குலக்குறிய வழிபாடு, பல தெய்வ வழிபாடு, மூடநம்பிக்கைகள் உட்பட தொடர்புடைய கிரியைகளில் நீக்கி அல்லாஹ் ஒருவனே வணங்க தகுதியானவன் அவனது தூதர் நான் என்ற மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். சமூக நிறுவனமான பொருளாதாரத்தில் முறையற்ற பொருளாதார முறைமையை தடை செய்ததுடன், முறையான பொருள்களை ஊக்குவித்தமை, உழைக்கும் பொருட்கள் இறைவனுக்குரியது எனவும் அதிலேயே ஏனையவர்களுக்கு வழங்குவதன் மூலம் சமூக நலன்புரி ஊக்குவித்தல், உட்பட பல மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். மேலும் சமூக நிறுவனமாக அரசியலில் சமூக நீதி, சமூக சமத்துவம், சகோதரத்துவம், சட்டவாட்சி, பல்சமய யாப்புறுவாக்கம், பொறுப்புணர்வு(அனைவரும் பொறுப்புதாரிகள்), சிறுபான்மை காப்பீடு, அனைவரும் இறைவனின் அடிமை, ஆட்சித்தலைவனுக்குரிய சிறந்த தலைமைப்பண்புகளைால் முன்மாதிரி ஆட்சி என்பன பலவற்றின் போன்றன மூலம் சமூக மாற்றத்தினை ஏற்படுத்தினார்கள் எனலாம்.

**பரிந்துரைகள்:**

இறைத்தூதரியத்துடன் தொடர்புடைய சமூகவியல் சார்ந்த ஏனைய நோக்கும் நிலைகளான இறைதூதர் ஒரு சமூகப் பணியாளர், சமூக உளவியலாளர், சமூக கொள்கை வகுப்பாளர், சமூக முரண்பாடுத் தீர்வாளர், இறைத்தூதர் சமூக நலன்புரியாளர், இறைத்தூதர் சிறுபான்மை நலன்காப்பவர், இறைத்தூதர் சமூக சமத்துவமானவர், சமூக நீதியாளர், இறைத்தூதர் விளிம்புநிலை மக்களுக்குரியவர், இறைத்தூரிய வைத்தியம், இறைத்தூரிய ஆரோக்கியம் போன்ற வெவ்வெறுபட்ட ஆய்வுக்குட்படுத்தல் வேண்டும்.

இறைத்தூதரிய தலைமைத்துவப் பண்புகள் சமூக, சமய, அரசியல், பொருளாதார மற்றும் இதர துறைகள் சார்ந்தது ஆராய்தல் வேண்டும். மேலும் இறைத்தூதரியத்துடன் தொடர்புடைய சமகால விடயங்களைக் கொண்டும் ஆராய்தல் வேண்டும்.

போன்ற பரிந்துரைகளை எதிர்கால ஆய்வாளர்களுக்கு முன்மொழிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


- Hasan, A.U.(2013), Islam's encounter with women's rights and feminism : The need for greater engagement of Muslim womenVL - 2,JO - International Journal of Islamic Thoughts
- Shankar Roa.C.N,(2019),Sociology: Principles of sociology with an introduction to social thoughts, S.Chand Publishing.
- Qadri Suwaibah.M, Qadri Dr Lubna Ahsan. ( 2016) **,**The Administration of Prophet Muhammad (PBUH) and Its Impact on the Contemporary States Journal of Philosophy, Culture and Religion ISSN 2422-8443 An International Peer-reviewed JournalVol.17.
- http://www.tamililquran.com/bukharidisp.php?start=5990

- http://www.tamililquran.com/muslimdisp.php?start=3313
- http://www.iium.edu.my/deed/articles/muhammad.html
- https://www.researchgate.net/publication/319737199_RESPONS_NABI_TERHADAP_TRADISI_JAHILIYYAH_Studi_Reportase_Hadis_Nabi
- https://www.academia.edu/35734687/The_Role_of_Islamic_Education_in_Promoting_the_Spirit_of_Peace
- https://www.researchgate.net/publication/249764499_Caste_in_Islam_and_the_Problem_of_Deviant_Systems_A_Critique_of_Recent_Theory.
- அனஸ்,எம்.எஸ்.எம்,(1997), இஸ்லாத்தின் தோற்றமும் ஒரு சமூக பண்பாட்டியல் ஆய்வு, பண்பாட்டு ஆய்வு வட்டம், பேராதனை பக்கம்-134.
- அமீன், எம்.ஐ.எம்.(2011),அரேபியர் வாழ்வியல், இஸ்லாமிய புத்தக நிலையம், கொழும்பு-09.
- அமீன், எம்.ஐ.எம்.(2015),இஸ்லாமிய நாகரீகம், இஸ்லாமிய புத்தக நிலையம், கொழும்பு-09.
- அபுல் அஃலா மௌதூதி, ஸை,(2001), இஸ்லாமிய அரசியல் கொள்கை, இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.
- அப்துல் ஹமீது பாகவி,ஆ.க.(1999), குர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம்,தாருல்ஹுதா வெளியீடு, சென்னை.
- இஸ்மியா பேகம்,எம்.எஸ்.(2013), இஸ்லாமிய நாகரிகமும் ஏனைய நாகரிகங்களும், இஸ்லாஹிய்யா வெளியீட்டு மையம், மாதம்பை.
- ஜாகிர் நாயக்,(2014),இஸ்லாம் வழங்கும் பெண்ணுரிமைகள், சாஜிதா புக் சென்டர்,சென்னை.
- பக்தவத்சல பாரதி,(1997), பண்பாட்டு மானுடவியல்,புதுச்சேரி வெளியூட்டகம்.
- யூஸுப் அல்கர்ளாவி, (2012),இஸ்லாமிய அரசியல், அல்ஹஸனாத் வெளியீட்டகம், கொழும்பு-09.
- சண்முகலிங்கம்.என்,(2008), சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள், நாகலிங்கம் நூலாயியம்.
- ஸஃபிய்யுர் ரஹ்மான்.ம,(2014), அர்ரஹீக் அல்மக்தூம், தாருல் ஹுதா வெளியீடு.
- ஸகி.ப,(2012), இஸ்லாமிய அரசியல் சிந்தனையின் அண்மைக்காலப் போக்குகள், உரையாடலுக்கும் ஆய்வுக்குமான மையம், இலங்கை.